## வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| கிறிஸ்தவம் I | தரம் :- 13 (2017) | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து,** அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்**களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் **காட்டுக.**

01. திருவிவிலியத்தின் கிரேக்கப் பிரதியை „வல்கேட்' என்னும் பெயரில் இலத்தீன் மொழிபெயர்ப்பு செய்தவர்.
    1) தூயயோவான் 2) தூயமத்தேயு 3) தூயஎரோம்
    4) தூயகிளமெண்ட் 5) தூயஅகுஸ்தின்

02. பழமை வாய்ந்த நூலாகத் திருவிவிலியம் அறிமுகஞ் செய்யப்படுவதற்கான காரணமாய் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளவை.
    1) பழைய மொழிகளின் கருத்துக்களும் காட்சிகளும்
    2) கீழைத்தேய இலக்கிய அம்சங்களாகும்.
    3) கீழைத்தேயத்திற்குரிய விடயமாகும்.
    4) வரலாற்றுக் கதைகளும் காட்சிகளுமாகும்.
    5) அரசியல் செய்திகளாகும்.

03. திருவிவியத்தின் பிரதான கருப்பொருள்
    1) கிறிஸ்து இயேசு 2) சீனாய் உடன்படிக்கை 3) மோசே
    4) புனித மரியா 5) திருச்சபை

04. திருவிவிலியத்தில் இயேசுவின் வாழ்க்கையோடு பிணைத்துள்ள பிரதேசம் எது?
    1) யூப்பிரதீஸ் நதிப்பிரதேசம் 2) கலிலேயாக்கடற்கரைப் பிரதேசம்
    3) சாக்கடல் கடற்கரைப் பிரதேசம் 4) நைல் நதிப்பிரதேசம்
    5) லெபனான் மலைப்பிரதேசம்

05. யூதர்களின் சமய,சமூக வாழ்க்கையின் மத்திய நிலையம் அமைந்திருப்பது.
    1) கானான் தேசத்தில் 2) சீனாய் மலையிலிருந்து 3) கார்மேல் மலையில்
    4) சீரியாவில் 5) ஜெருசலேமில்

06. 2வது படைப்பு கதைப்படி மனிதன் இறைவனோடு படைப்புச் செயற்பட்டில் தொடர்பு கொள்வது.
    1) உயிருள்ள அனைத்திற்கும் பெயரிட்டதன் மூலம்
    2) படைப்பை ஆளுவதன் மூலம்
    3) படைப்பை விருத்தி செய்வதன் மூலம்
    4) பாவத்தில் இருந்து விலகி இருப்பதன் மூலம்
    5) பலி ஒப்புக்கொடுப்பதன் மூலம்

07. சனத்தொகை கூடிய பிரதேசமாகிய கலிலேயாவில் வாழும் மக்களின் பிரதான தொழில்களாவன.
1) தச்சுவேலை, விவசாயம் 2) அச்சுத்தொழில், தச்சுத்தொழில் 3) மீன்பிடித்தல், தச்சுவேலை
4) கைத்தொழில், விலங்குவளர்ப்பு 5) விவசாயம், மீன்பிடி

08. இஸ்ராயேல் கலாச்சார ரீதியான சொந்தம் கொண்டாடிய மக்கள் குழுவினர்.
1) ஹிக்சோலியர் 2) பாரசீகர் 3) எபேசியர் 4) எபிரேயர் 5) எகிப்தியர்

09. 10 பெரும் துன்பங்களும் முக்கியமாக எந்த மரபுகளின் அடிப்படை எண்ணக்கருவாகும்.
1) யாவே, எலோகிம், வாய்மொழி
2) குரு, யாவே, வாய்மொழி
3) குரு, எலோகிம், வாயமொழி
4) குரு, யாவே, எலோகிம்
5) எலோகிம், குரு, இணைச்சட்டம்

10. ஆபிரகாம் அழைப்பின் இரண்டு முக்கிய அம்சங்கள்.
1) நம்பிக்கை, அன்பு 2) தியாகம், சவால் 3) தியாகம், அன்பு
4) தியாகம், எதிர்நோக்கு 5) நம்பிக்கை, எதிர்நோக்கு

11. யாக்கோபு "இஸ்ராயேஸ்" என்ற பெயரை பெற்றது.
1) யோசேப்பின் பிறப்பின் பின்னர் ஆகும்.
2) எகிப்தில் யோசேப்பை சந்தித்த பின்னர் ஆகும்.
3) அவரின் பிறப்பின் போது
4) ஏசாவோடு ஒற்றுமையான போது
5) அறியாத ஆடவரோடு போராடிய பின்னர்

12. வாக்குப்பண்ணப்பட்ட பூமிக்குச் சென்ற பயணத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு நீர் கிடைத்த இரண்டு இடங்கள்
1) தீர், சீதோன் 2) யோய்தாள், சமாரியா 3) பெர்செபா, சீதோன்
4) தீர், யோர்தான் 5) மாரா, மெரிபா

13. நாடு கடத்தல் என்பது.
1) வாக்குப்பண்ணப்பட்ட பூமியை நோக்கி செல்லுதல்.
2) பாவிகளுக்கு கொடுத்த ஓர் தண்டனை.
3) இறைவன் இல்லாத ஓர் நாட்டில் வாழுதல்.
4) இறைவனோடு ஒரு நாட்டில் வாழுதல்
5) பாலும் தேனும் பொழியும் நாட்டுக்குச் செல்லுதல்.

14. யூதர்களுடைய சமய சட்டங்களிற்கு ஏற்ப பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்ப்பு வழங்குதல் போன்றன நிறைவேற்றப்படும் இடம்.
1) சினகல் 2) தலைமைச்சங்கம் 3) சபை மகாநாடு
4) நீதிமன்றம் 5) சபை மண்டபம்

15. எசாயா இறைவாக்கினரின் பொருள் என்ன?
1) இறைவன் எம்மோடு
2) யாவே உயர்த்துகிறார்
3) இறைவன் பலப்படுத்துகிறார்
4) யாவே மீட்பராக இருக்கிறார்
5) அபிஷேகம் செய்யப்பட்டவர்.

16. இறைவாக்கினர் எசாயா பபிலோனியாவின் அழிவை ஒப்பிட்டு இருப்பது
1) பாழ்நிலத்திற்கு 2) கல்லறைக்கு 3) வறண்ட நிலத்திற்கு
4) சமவெளிக்கு 5) சேறும் சகதி நிறைந்த நிலத்திற்கு

17. இறைவாக்கினர் அழைப்பின் படி எசேக்கியல் இறைவாக்கினரை தைரியப்படுத்தியது.
    1) "நாடுகடத்தப்பட்ட மக்களிடம் போ" என்றாகும்.
    2) நெருப்பு பொறியினால் உதடுகளை தொட்டதன் மூலம்
    3) "அஞ்சாதே நான் உன்னோடு இருப்பேன்" என்றாகும்.
    4) அஞ்சாதே சக்தியுள்ளவனாக்குவேன்
    5) வாயை தொடுவதன் மூலம்

18. நாடு கடத்தப்பட்ட மக்களிற்கு புதிய வாழ்வு பற்றிய எதிர்நோக்கை ஏற்படுத்தி அப்புதிய வாழ்வு அவர்களின் வாழ்க்கையில் எல்லா தேவைகளையும் உள்ளடக்கியதாக இருக்குமென எடுத்துக்காட்டிய இறைவாக்கினர்.

| | | |
|---|---|---|
| 1) எசாயா | 2) ஆமோஸ் | 3) எசேக்கியல் |
| 4) எரேமியா | 5) மீகா | |

19. கிறிஸ்துவே மெசியா என உறுதிப்படுத்துவதே நோக்கமாக கொண்ட நற்செய்தியின் எழுத்தாளர்.

| | | |
|---|---|---|
| 1) தூய லூக்கா | 2) தூய பவுல் | 3) தூய யோவான் |
| 4) தூய மாற்கு | 5) தூய மத்தேயு | |

20. புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதின் படி "நான் செய்வது என்னதென்று இப்பொழுது உனக்கு புரியாது. பின்னரே புரிந்து கொள்வாய்" என யேசு எச்சந்தர்ப்பத்தில் கூறினார்.
    1) இலாசரை உயிர்ப்பித்த போது
    2) சிலுவையில் மரிக்கும் போது
    3) சீடரின் காலடியை கழுவிய போது
    4) தோற்றம் மாறிய போது
    5) பாவிப் பெண்ணை மன்னித்த போது

21. சிலுவையின் மீது வைத்த குற்ற அறிக்கையை திருத்தி மீண்டும் எழுதும் என யூத தலைமைக்குருக்கள் பிலாத்துவிடம் முன்வைத்த ஆலோசனை என்ன?
    1) நசரேத்து ஊர் யேசு யூதர்களின் தலைவன்
    2) நாசரேத்து ஊர் யேசு யூதர்களின் அரசன் அல்ல.
    3) யேசு யூதர்களின் அரசன்
    4) யூதர்களின் அரசனாகிய நாசரேத்து ஊர் யேசு நான்
    5) யூதர்களின் அரசன் நான்

22. இறை அரசையிட்டு தலைமைத்துவம் என்பது

| | | |
|---|---|---|
| 1) தியாகம் செய்தல் | 2) புளிக்காரமாதல் | 3) சீடத்துவம் வகித்தல் |
| 4) பணிபுரிதல் | 5) எஜமானாகுதல் | |

23. மறுபிறப்பு, உயிர்த்தெழுதல் எனும் கொள்ளைகள் பற்றிய விளக்கத்தில் "உயிர்த்தெழுதல்" என்பதன் மூலம் கருதப்படுவது.
    1) ஒரு காலத்தில் பிறத்தல்.
    2) விண்ணுலக இன்பத்தை உரிமையாக்குதல்
    3) அனைத்தினதும் முடிவு
    4) முற்பிறப்புடன் தொடர்புபடல்
    5) மீண்டும் மீண்டும் பிறத்தல்.

24. தூய யோவான் நற்செய்தி 18 : 1 – 14 படி இயேசு பேதுருவிடம் "வாளை உறையில் போடு" எனக' கூறியது.
    1) வாளை எடுப்பவன் வாளால் மடிவான் என்பதாகும்.
    2) இவ்வுலக அதிகாரத்திற்கு சுயவிருப்பத்தோடு பணிகிறார் என்பதாகும்.
    3) பேதுரு தன்னை மறுதலிப்பார் என அறிந்திருப்பார் என்பதாலாகும்.
    4) விண்ணுலக சேனைகள் யேசுவிற்கு எதிராக போரிடுவார் என்பதாகும்.
    5) யேசுவை கைது செய்ய ஆயுதங்களோடு வந்ததால் ஆகும்.

25. உரோமை பேரரசிற்கும் யூத தலைமைத்துவத்திற்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு பகிரங்கமாக உதவ முன்வந்தவர்.
1) நிக்கதேமு 2) தூயயோவான் 3) சாமாரியப் பெண்
4) வலப்பக்க கள்வன் 5) அரிமத்தியா யோசேப்பு

26. இயேசு தமது சீடர்களுக்கு தூய ஆவியின் வழியாக பாவங்களை மன்னிக்கும் வல்லமையை அளித்தது.
1) அவர்களது தலைகளில் கைகளை வைத்து செபிப்பதன் மூலம்
2) அவர்களோடு தந்தையிடம் முளந்தாலிட்டு செபித்ததன் மூலம்
3) அவர்கள் மேல் ஊதி வாழ்வையும் ,பலத்தையும் அழித்ததன் மூலம்
4) கர்த்தர் கற்பித்த செபத்தை கற்பிப்பதன் மூலம்
5) இறுதி இரா உணவின் பின்னர்.

27. பெந்தக்கோஸ்து நாளில் உலகின் பல பாகங்களில் இருந்தும் ஜெருசலேமிக்கு வந்தமக்கள் தமது மொழிகளில் நற்செய்தியை விளங்கிக் கொண்டனர் என்பதிலிருந்து உறுதிப்படுத்தப்படுவது.
1) திருத்தூதர் பல மொழிகளை அறிந்து கொண்டனர் என்பது
2) திருத்தூதருக்கும், இறைவாக்கினருக்கும் வல்லமை உண்டு என்பதாகும்.
3) தூய ஆவி ஆனவர் மேலும் இறங்கியது என்பது.
4) திருத்தூதரின் தைரியம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது.
5) யூதமக்களின் அறியாமையை உறுதிப்படுத்துகின்றது என்பது.

28. திருப்பலியில் சொல்லப்படும் நீசேயா விசுவாசப் பிரமாணம் திருச்சபை முழுவதும் விசுவாச சத்தியமாக ஏற்றுக்கொண்ட பொதுச் சங்கம்.
1) எருசலேம் பொதுச்சங்கம் 2) நீசேயா பொதுச்சங்கம் 3) கால்சிடோன்பொதுச்சங்கம்
4) எபேசு பொதுச்சங்கம் 5) கொன்ஸ்தாந்தி நோபிள்

29. யோவான் 3 : 5 – 6 இன்படி இயேசு நிக்கதேமுடிவுடன் நடந்த உரையாடலில் திருமுழுக்கு பற்றி கொடுத்த விளக்கம்.
1) பாவ மன்னிப்பின் மூலம் கிடைக்கும் பிறப்பு
2) அன்னியோன்னிய தொடர்பின் ஒரு வாழ்வு
3) தூய ஆவியின் மூலம் கிடைக்கும் புதுவாழ்வு
4) ஆன்மிக உயிர்தரும் ஓர் ஊற்று
5) உயிர்ப்பின் ஓர் அடையாளம்

30. திருச்சபையின் பொது சங்கங்களில் முதல் சங்கமாக இருப்பது.
1) எபேசு பொதுச்சங்கம் 2) திதித்தந்தின் பொதுச்சங்கம் 3) ஜெருசலேம் பொதுச்சங்கம்
4) 1ம் வத்திக்கான் பொதுச்சங்கம் 5) நிசேயா பொதுச்சங்கம்

31. தூய பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் அவருடன் கலந்து கொண்டவர்கள்.
1) பர்ணபா, யோவான், சீலா 2) சீலா, திமோத்தேயு, லூக்கா 3) யோவான், சீலா, லூக்கா
4) திமேத்தேயு, பர்ணபா, யோவான் 5) பிலிப்பு, திமோத்தேயு, லூக்கா

32. தூயபவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணம் இடம்பெற்ற காலப்பகுதி
1) கி.பி 38 முதல் 45 வரை 2) கி.பி 46 முதல் 49 வரை 3) கி.பி 46 முதல் 69 வரை
4) கி.பி 54 முதல் 65 வரை 5) கி.பி 56 முதல் 62 வரை

33. இறையருளை உணர்ந்த தூய பவுல் பயன்படுத்தும் கிரேக்க பதமான ‘‘காரிஸ்’’ என்பதன் பொருள் என்ன?
1) நிலையான நம்பிக்கை 2) நிலையான அன்பு 3) உண்மையான நம்பிக்கை
4) நேர்மையான கீழ்ப்படிதல் 5) எப்போதும் பொறுமையாயிருத்தல்

34. திருச்சபைக்குள் கிறிஸ்தவ குடும்பம் அறிமுகம் செய்யப்படுவது.
1) முழுத்திருச்சபை 2) பூரண திருச்சபை என்றாகும் 3) யூததிருச்சபை என்றாகும்
4) முடிவற்றசபை என்றாகும் 4) இல்லத்திருச்சபை என்றாகும்.

35. தேசிய குருக்களை பயிற்றுவிப்பதற்காக இலங்கையில் முதலாவது குருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தவர்.
1) அருட்தந்தை யோசப்வாஸ் அடிகளார்.
2) அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்.
3) அருட்தந்தை கிறிஸ்டோப்பர் பொன்ஜீன் அடிகளார்.
4) மேன்மை தங்கிய ஆயர் எட்டின் பீரிஸ் ஆண்டகை
5) மேன்மை தங்கிய ஆயர் டிமசனட் ஆண்டகை

36. மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் சமூகத்தேவைகளை நிறைவுசெய்தல் ஆகியவற்றைக் குறிக்கோளைக் கொண்டு இலங்கையில் சகல மறை மாவட்டங்களிலும் பணிகளில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ சமூக நலன்புரி நிறுவனம் எது?
1) தூய வின்சென் டீ பவுல் இரக்கப்பணி
2) கிறிஸ்தவ இளைஞர் கழகம்
3) கிறிஸ்தவ மகளிர் கழகம்
4) கரித்தாஸ் இலங்கை (செடெக்)
5) இல்லற அப்போஸ்தலிக்க பணி

37. பாவிகளுக்கு தங்கள் கைகளைத் தூய்மையாக்கவும், உள்ளங்களை தூய்மையாக்கவும் எச்சரிக்கை வழங்கப்பட்டிருப்பது.
1) தூய யோவான் எழுதிய இரண்டாம் திருமுகத்திலாகும்.
2) திருத்தூதர் பணி நூலிலாகும்.
3) தூய யாக்கோபு எழுதிய முதலாவது திருமுகத்திலாகும்.
4) கொலோசேயர் திருமுகத்திலாகும்.
5) தூய பேதுறு எழுதிய முதலாவது திருமுகத்திலாகும்.

38. தொழிலாளர் சாசனம் (நேறும் நோவாரும்) என்னும் சுற்றுமடலை வெளியிட்டவர்.
1) திருத்தந்தை 13 வது சிங்கராயர்
2) திருத்தந்தை 11 வது பத்திநாதர் ஆவார்.
3) திருத்தந்தை 2 வது அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
4) திருத்தந்தை 7 வது கிறகோரியார் ஆவார்.
5) திருத்தந்தை 7 வது பத்திநாதர்

39. போத்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தபோது இலங்கையில் காணப்பட்ட பிரதான ராஜதானிகள் மூன்றும் எவை?
1) கோட்டை, வடமத்தியம், மலையகம்
2) கோட்டை, மலையகம், வடக்கு
3) ருகுணு, கோட்டை, வடக்கு
4) உடரட்ட, பஹத்தரட்ட, கோட்டை

40. புரட்டஸ்தாந்து மறைத்தூது அமைப்புக்கள் மத்தியில் பெரும்பாலும் கத்தோலிக்க சபைகளின் பண்புகளைக் கொண்ட சபையாக விளங்குவது.
1) மெதடிஸ் சபையாகும் 2) பப்டிஸ்ட் சபையாகும் 3) இரட்சணிய சேனையாகும்
4) பிரஸ்பிடோரியன் சபையாகும் 5) இங்கிலாந்து சபையாகும்.

41. திருப்பலி கிறிஸ்தவ வாழ்வின் மையம் என்பது பற்றிக் கலந்துரையாடும் சுற்றுமடல் எது?
1) மிஸ்ரேரியுஸ் பீதேய் 2) மிதிதோர் தெய் 3) சக்சிலோசியாத எயுக்கரிதியா
4) சக்கிரமெண்டும் யுனிடாடிஸ் 5) லூமென்சியும்

42. கண்களுக்குப் புலப்படுகின்ற படைப்பு அனைத்திலும் படைத்தவரை அறிந்து அவரை அன்பு செய்யக்கூடியவர் மனிதன் மட்டுமே இவ்வெளிப்பாட்டின் மூலம் மனிதனின் உயர்வான தன்மை மேலெடுத்துக் காட்டப்படுகிறது. இதனை ஒரு படிப்பினையாக முன்வைப்பது.
   1) மறைச் சுதந்திரம்
   2) இன்றைய உலகில் திருச்சபை.
   3) கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு.
   4) கத்தோலிக்க திருச்சபையின் பெரிய குறிப்பிடம்
   5) மகளிர் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை

43. "காரிஸ்மா" என்ற சொல்லின் கருத்து.
   1) திருச்சபைக்குள் இருக்கும் இறைசெயற்பாடு என்பதாகும்.
   2) தூய ஆவியானவரிடமிருந்து நமக்கு கிடைக்கும் விசேட அருட்கொடை என்பதாகும்.
   3) கிறிஸ்து யேசுவின் மனிதாவாதரம் என்பதாகும்.
   4) இறைவனைச் சார்ந்த பிரதான வலு சக்தி என்பதாகும்.
   5) இறைவன் மட்டில் மனிததனிடத்திலிருக்கும் நம்பிக்கை என்பதாகும்.

44. தூய ஜெரோம் கிறிஸ்தவ எழுத்தாளர் ஆவதுடன் திருச்சபைத் தந்தையும் கிறிஸ்தவ தத்துவவிலாளமோகக் குறிப்பிடத்தக்கவர் யார்?
   1) தூய தேர்த்தூலியன்   2) தூய சிறிஸ்   3) தூய அகஸ்டின்
   4) தூய ஜஸ்ரின்   5) தூய பெக்கோமியஸ்

45. இறைவனுடைய விருப்பத்தினை ஆராய்ந்து பார்த்து அதற்கு கீழ்ப்படிந்து அதன்படி வாழுதல் என்பது.
   1) தார்மீகப் பண்பாடும்   2) நியாயமாகும்   3) நீதியாகும்
   4) சமத்துவமாகும்   5) நல்லுறவாகும்

46. மறைமாவட்டத்தை நிருவகித்த ஆயர்களை தெரிவு செய்தல் ஆகிய பணிகளைப் பேரவையின் மூலம் நிறைவேற்றும் திருச்சபை.
   1) கத்தோலிக்கத் திருச்சபை   2) இலங்கைத்திருச்சபை   3) பிரஸ்பிடேரியன்சபை
   4) பப்பிஸ்ட் திருச்சபை   5) தென்னிந்திய திருச்சபை

47. 1869 இல் கொழும்பில் திருத்தூதராக மறைமாவட்ட ஆயரான மேதகு சில்லானி ஆண்டகையின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு வருகை தந்த துறவிகள் சபை.
   1) புனித மரியாளின் பிரான்சிஸ்கன் சகோதரிகள்
   2) ஏழைகளின் சிறிய சகோதரிகள்
   3) பிரான்சின் நல்லாயன் சபை சகோதரிகள்
   4) அப்போஸ்தலிக்க சபையியின் துறவற சகோதரிகள்
   5) அன்பின் சகோதரிகள்

48. மனித அழைப்பை நிறைவு பெறச்செய்ய இன்றியமையாத ஊடகம் எனக்கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி கற்பிப்பது என்ன?
   1) அவன் செல்வச் சிறப்புடன் வாழவேண்டும் என்பதை ஆகும்.
   2) அருளடையாளங்களைப் பெற வேண்டும் என்பதை ஆகும்.
   3) தினமும் செபிக்க வேண்டும் என்பதை ஆகும்.
   4) தினமும் திருப்பலியில் பங்குபற்ற வேண்டும் என்பதை ஆகும்.
   5) சமூகமாக வாழ வேண்டும் என்பதை ஆகும்.

49. 20ம் நூற்றாண்டளவில் இயேசு கிறிஸ்துவே முழுமுதல் அருளடையாளம் என்னும் சிந்தனையை முன்வைத்தவர்.
   1) காள் பெக்ஸ்   2) தூயலொயோலா இஞ்ஞாசியர்   3) தூய சிப்ரியன்
   4) ஒத்தோ செபஸ்றோன்   5) எட்வட் ஸ்கில்பெக்ஸ்

50. மரபுரீதியான கத்தோலிக்க நாட்டுக்கூத்து ஆரம்பமாகி வளர்ச்சியடைந்த இடங்களாவன
   1) மன்னார், திருகோணமலை   2) யாழ்ப்பாணம், திருகோணமலை   3) யாழ்ப்பாணம், மட்டக்களப்பு
   4) மன்னார், யாழ்ப்பாணம்   5) அம்பாறை, மன்னார்

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| கிறிஸ்தவம் II | தரம் :- 13 (2017) | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி II

- **பகுதி 'அ' இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 'ஆ' இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – அ

01. i. பாவத்தின் விளைவாக சமத்துவ நிலை முறிவடைந்த விதத்தினை நான்கு காரணிகள் மூலம் விளக்குக.
 ii. கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னர் பலஸ்தீனாவை அதிகாரத்திற்குள் வைத்திருந்த பேரரசுகள் நான்கையும் பெயரிடுக.
 iii. ஆரம்பத் திருச்சபையில் திருத்தொண்டர்கள் (தியாக்கோன்) ஆற்றிய பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
 iv. திருச்சபையின் ஆரம்ப காலம் பற்றி அறிந்து கொள்ள உதவும் மூலங்கள் நான்கும் எவை?
 v. இயேசு பிறமதத்தவர்களுக்கும் தமது குணமாக்கும் வல்லமையை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் நான்கினைப் புதிய உடன்படிக்கையிலிருந்து எடுத்துக்காட்டுக.

(4x5=20 புள்ளிகள்)

02. i. மத்திய காலத்தில் சித்திரக்கலை வளர்ச்சிக்கு உதவிய நால்வரைப் பெயரிடுக.
 ii. இரண்டாவது படைப்புக் கதையின்படி மனிதனுடைய வீழ்ச்சி தொடர்பான உவமை, உருவகங்கள் நான்கைத் தருக.
 iii. தூயமாற்குவின் நற்செய்தியின்படி கிறிஸ்துவின் பாடுகளைப் பிரித்துக்காட்டும் நான்கு வடிவமைப்புக்களும் எவை?
 iv. தோமாவுக்குத் தோன்றுதல் மூலம், தூய யோவான் சீடர்களின் வாழ்க்கைக்கு முன்வைக்கும் வழிகாட்டல்கள் சட்டதிட்டங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
 v. பழைய உடன்படிக்கையில் இஸ்ராயேல் மக்கள் வருடம் தோறும் பாஸ்காத்திருவிழா விருந்தைச் சுற்றி ஒன்று கூடினர். அப்பாஸ்கா உணவு வழிபாட்டின் பிரதான அம்சங்கள் நான்கு தருக.

(4x5=20 புள்ளிகள்)

03. i. தொடக்க நூலின்படி, பாவம் பரவுதலை நான்கு உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுக.
 ii. பழைய உடன்படிக்கையி பாஸ்கா பொது வழிபாட்டில் நிகழ்ந்த அம்சங்களின் கருத்துக்கள் நான்கு எழுதுக.
 iii. இலங்கை கிறிஸ்தவருக்கு உதயமான சமயச்சுதந்திரத்தோடு கி.பி 1805 முதல் கி.பி 1883 வரையானகாலப்பகுதியில் இந்நாட்டில் பணிபுரிய வருகை தந்த வெளிநாட்டு மறைத்தூதுக் குழுக்கள் நான்கினைப் பெயரிடுக.
 iv. 1 கொரிந்தியம் 12 : 21 இன்படி கண், கை, தலை, பாதம் என்னும் உறுப்புக்கள் மூலம் அடையாளப்படுத்தப்புடும் விடயங்கள் யாவை?

## பகுதி – ஆ

04\. i. நாடு கடத்தப்பட்ட காலத்தில் அனுபவித்த நம்பிக்கைக்கு எதிரான சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது வாய்மொழி மரபில் நிலவிவந்த இறைகருத்துக்கள் எழுத்துவடிவம் பெறுவதற்குரிய தேவை ஏற்பட்டதற்கான காரணங்களை விளக்குக.

ii. இறைவனுடைய விருப்பமும் திட்டமும் நிறைவேற்றப்பட்ட முறையினை எடுத்துக்காட்ட எழுதப்பட்ட திருவிவிலியத்தைத் தழுவி உமது வாழ்வில் இறைவிருப்பம் நிறைவேற்றப்படுகிறது என்பதனை விளக்குக.

(2x10=20 புள்ளிகள்)

05\. i. இறைவாக்கினர் அழைப்பின் பொறுப்புக்களை குறிப்பிட்டு எசாயா, எரேமியா, எசக்கியேல்என்னும் இறைவாக்கினர்களில் ஒருவரின் அழைப்பில் இப்பொதுப்பண்புகள் காணப்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

ii. இன்றைய சமுதாயத்தின் சவால்களுக்கு முன்பே உமது இறைவாக்குப் பணியின் பொறுப்பினை உதாரணங்கள் ஐந்தின் மூலம் விளக்குக.

(20x10=20 புள்ளிகள்)

06\. i. தூய பவுல் 1கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் குறிப்பிடும் தூய ஆவியின் செயற்பாடுகளைச் சுருக்கமாக விபரிக்குக.

ii. “இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்தல் கிறிஸ்தவ அடையாளமாகும்” தூய ஆவியின் அபிஷேகம் பெற்ற இளம் கிறிஸ்தவனாக நீர் இதற்கு எவ்வாறு சான்று பகர்வீர் எனச்சுருக்கமாக விபரிக்குக.

07\. i. திருச்சபையின் மறுசீரமைப்புச்செயலை முன்னெடுத்துச் செல்லத் தலைமை தாங்கிய துறவற, குருத்துவ சபைகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, அவை உமது ஆன்மீக வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை சுருக்கமாக விபரிக்குக.

ii. 1546 இல் திருத்தந்தை iiiஆம் சின்னப்பரால் ஆரம்பிக்கப்பட்ட பொதுச்சங்கத்தில் தீர்மானிக்கப்பட்ட புனரமைப்புத் திட்டங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவை உதவும் ஆன்மீக வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகிறது என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

(2x10=20 புள்ளிகள்)

08\. i. ,,தூய யோசப்வாஸ் அடிகளாரின் அரவணைப்பால் மிளிர்ந்த இலங்கை கிறிஸ்தவ திருச்சபை’ என்னும் தலைப்பை பின்வரும் விடயங்களில் கீழ் விபரிக்குக.

அ. அவர் இந்நாட்டிற்கு வருகை தந்த இக்கட்டான பயணம்.
ஆ. ஒல்லாந்தர் காலத்தில் நிறைவேற்றிய மறைப்பணி
இ. அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கை.
ஈ. ஓறத்தோரியன் குருக்களை இலங்கைக்கு வரவழைத்து ஆற்றிய பணிகள்
உ. முத்திப்பேறு பெற்ற நிலைக்கும் புனித நிலைக்கும் உயர்ந்தப்பட்டமை.

ii. 1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்ததோடு, இலங்கைத் திருச்சபை முகம் கொடுக்க நேர்ந்த சவால்கள் பலவாகும். அவற்றில் பிரதான பிரச்சினைக்கு உமது கவனத்தைச் செலுத்தி, ,,சுதந்திரத்தின் பின் இலங்கைத் திருச்சபை முகம் கொடுத்த பிரச்சினையும் அவற்றிற்கான தீர்வுகளும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.